# FAMOUS MORAL STORIES

Indian Vedic School
Language of the Gods

BY INDIAN VEDIC SCHOOL

TAMIL VOL - 6


















# FAMOUS MORAL STORIES

Indian Vedic School
Language of the Gods

BY INDIAN VEDIC SCHOOL

TAMIL VOL - 6


















# INDEX


| | |
|---|---|
| CHOCOLATE TRICK | 1-6 |
| COMMANDER | 7-11 |
| COUNSELLING | 12-21 |
| WISE MAN | 22-28 |
| PROSPEROUS COUNTRY | 29-36 |
| DAISUKE'S WISDOM | 37-43 |


சாக்லேட் தந்திரம்



ஒரு சிறிய கிராமத்தில் ஆல்ப்ரெட் என்ற ஒருவன் இருந்தான். இவன் வஞ்சகம் நிறைந்தவன். மக்களை சூழ்ச்சி செய்து ஏமாற்றி வந்தான்.
அதே கிராமத்தில் பீட்டர் என்ற பழ வியாபாரி ஒருவன் இருந்தான். ஆல்ப்ரெட் உடன் மற்ற கிராமத்தினரும் இவன் கடைக்கு ஊர் கதை கப்ஸா அடிக்க மாலை நேரம் வருவது வழக்கம்.
ஒரு நாள் ஆல்ப்ரெட், மற்றவரும் பீட்டர் கடையில் வெட்டி பேச்சு பேசிக்கொண்டிருந்தனர்.
இப்போதெல்லாம் நமது செரிமான அமைப்பு நாம் உண்பதற்கு ஒவ்வாமலிருக்கிறது.
இந்த டஜன் வாழைப் பழங்களை பார்த்தீர்களா? என்னால் சாப்பிட முடியாது. பீட்டர் கூட சாப்பிட முடியாது என நினைக்கிறேன்.


நீ என்ன சொல்கிறாய்? நான் கிழவன் அல்ல, என்னால் அத்தனையும் சாப்பிட முடியும்.
சரி, நூறு ரூபாய் பந்தயம்.
கொஞ்சம் பொறு, யார் ஜெயிக்கிறார் என்று பார்த்துக்கொள்.
ஒய், நீ...!!! நீ தோற்று விட்டாய்.
எப்படி?
நான் டஜன் வாழைப்பழங்களை தோல் உரிக்காமல் சாப்பிட சொன்னேன்.
பீட்டர் எமாற்றப்பட்டதை உணர்ந்து, நூறு ரூபாய் ஆல்ப்ரெட்-க்கு கொடுத்து விடுகிறான்.
ஒரு நாள் இவனுக்கு நல்ல பாடம் கற்பிக்க வேண்டும்.
ஆமாம், அவன் தன்னை ரொம்ப புத்திசாலி என நினைக்கிறான்.


சில நாள்களுக்குப்பின், பீட்டர் ஆல்ப்ரெட் உடைய கடைக்கு வந்தான். அங்கே, வெள்ளெரிக்காய் ஒரு வரிசையில் வைத்திருந்ததை பார்த்தான்.
என் சின்ன வயதில் நான் 50 வெள்ளெரிக்காய்கள் சாப்பிட்டிருக்கிறேன்.
நீ 50 வெள்ளெரிக்காயை சாப்பிட்டால், நான் உனக்கு உன் வீட்டு வாசலில் நுழையாத அளவுக்கு ஒரு சாக்லேட் வாங்கி தருகிறேன்.
ஊக்லி பூக்லி பூ.... பீட்டரை முட்டாள் ஆக்க மீண்டும் ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது.
நான் பந்தயத்தை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் நான் தோற்றால் உனக்கு இரு நூறு ரூபாய் தரு கிறேன், இல்லை என்றால், நீ சொல்லும் சிறப்பான சாக்லேட் கொடு.
ஆல்ப்ரெட் வெள்ளெரிக்காய்களை சாப்பிட ஆரம்பித்து, பாதி சாப்பிடாமல் சாலை மீது வீசினான்.
இது வெள்ளெரிக்காய் சாப்பிட்டதற்கு அர்த்தமில்லை.



ஐயா, நான் இந்த வெள்ளரிக்காய்களை வீசக்கூடிய விலையில் விற்கிறேன்.
நீ என்ன பைத்தியமா? சாப்பிட்ட வெள்ளரிக்காயை யார் வாங்குவார்கள் ?
இப்பொ என்ன சொல்கிறாய். அந்த ஆள் நான் வெள்ளரிக்காயை சாப்பிட்டதை உறுதிப்படுத்துகிறார்.
நான் ஒப்புக்கொள்கிறேன், நான் பந்தயத்தில தோற்று விட்டேன்.
பிட்டர், நினைவில் வைத்துக்கொள், என்னை யாரும் ஜெயிக்க முடியாது.
சரி, ஆல்ப்ரெட், வா, நான் சொன்ன மாதிரி உன் வீட்டு வாசலில் நுழைய முடியாத சாக்லேட் வாங்கி தருகிறேன்
இருவரும் ஒரு மிட்டாய் கடைக்கு போனார்கள். பீட்டர், ஒரு சின்ன சாக்லேட்டை வாங்கி ஆல்ப்ரெட் -க்கு கொடுக்கிறான். அவ்வளவு சின்ன சாக்ல்லெட்டை பார்த்து ஆல்ப்ரெட் ஆச்சரியப்பட்டான்.


என்னா இது ? பந்தயம் நீ என் வீட்டு வாசலில் நுழையாத அளவுக்கு பெரிய சாக்லேட் தருவது தானே.
உனக்கு சந்தேகம் இருந்தால் இதை உன் வீட்டு வாசலில் போட்டு பார், உள்ளே நுழைகிறதா என்று.
ஒவ்வொருவரும் சிரிக்க ஆரம்பித்தனர்.
ஆமாம் ஆல்ப்ரெட், பீட்டர் உன் வீட்டு வாசலில் நுழைய முடியாத சாக்லேட் தருகிறான். ஹா... ஹா... ஹா ...
பீட்டர் தனக்கு பாடம் கற்பிக்க இதை செய்தததாக ஆல்ப்ரெட் புரிந்து கொண்டான். அன்று முதல், ஆல்ப்ரெட் மற்றவர்களிடம் சூழ்ச்சி செய்வதை நிறுத்தி விட்டான்.
முற்றும்


தளபதி


பட்ருயினாவின் படைத்தளபதி வீரமும் திறமையும் கொண்டவன். தன்னுடைய படை விரோதியின் எந்த படையாக இருந்தாலும், தளபதியின் தலைமையில் தோற்கடிக்கும் என்று மன்னன் பாரீஸ் நம்பிக்கை வைத்திருந்தான்.
ஒரு நாள் தளபதி குணமாக முடியாத நோயினால் இறந்து போனான்.
என் படைக்கு உடனே ஓர் தளபதியை நியமிக்க வேண்டும்.
அனைவரும் கவனிக்கிறார்கள்
கவனமாக கேளுங்கள். மன்னன் ராஜ்ஜியத்தின் தகுதியுள்ள சிப்பாய்களை தளபதி பதவிக்கு அழைத்துள்ளார்.


கூடியிருந்தவர்களில், சீசர், ஹெக்டர் என்ற இருவர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
நாளைய போட்டியில் ஜெயிப்பவர் தளபதியாகலாம், அது வரை ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள்.
வாழ்த்துக்கள் ஐயா, திரு. ஹெக்டர் இதை உங்களுக்கு அனுப்பியிருக்கிறார்.
சீசர், நீ ரொம்ப நல்ல போராளி, நமக்குள் யார் சிறந்தவர் என்று நாளை தெரியும். என்னிடம் ஒரு திட்டம் உள்ளது, நம் இருவருக்கும் பயனுள்ளதாக இருக்கும்.
நீ போட்டியிலிருந்து விலகி விட்டால், நான் உயிருடன் இருக்கும் வரை உனக்கு பாதி சம்பளத்தை ஒவ்வொரு மாதமும் அனுப்பி வைக்கிறேன். போட்டியில் நமக்கு சமமான வாய்ப்பு இருப்பதை நினைத்துக்கொள்.


இப்படிப்பட்ட
சுய நலவாதி
தளபதியாவதற்கு
தகுதியற்றவன்.
இதே போல் ஹெக்டருக்கும்
ஒரு கடிதம் கொடுக்கப்படுகிறது.
ஐயா, திரு. சீசர்
இதை உங்களுக்கு
அனுப்பியுள்ளார்.
ஹெக்டர், நீ ரொம்ப நல்லஒ படை வீரன்.
நமக்குள் யார் சிறந்தவர் என்று நாளை
தெரியும். என்னிடம் ஒரு திட்டம் உள்ளது, நம்
இருவருக்கும் பயனுள்ளதாக இருக்கும்.
நீ போட்டியிலிருந்து விலகி விட்டால், நான்
உயிருடன் இருக்கும் வரை உனக்கு பாதி
சம்பளத்தை ஒவ்வொரு மாதமும் அனுப்பி
வைக்கிறேன். போட்டியில் நமக்கு சமமான
வாய்ப்பு இருப்பதை நினைத்துக்கொள்.
ஹெக்டர் மன்னனுக்கு கடிதம் எழுதி தான் போட்டியிலிருந்து
விலகி, கிராமத்திற்கு திரும்பி போவதாக குறிப்பிட்டான்.



வாழ்த்துக்கள் மன்னா, நான் போட்டிக்கு தயார்
ஹெக்டர் சொந்த காரணத்தினால் போட்டியிலிருந்து விலகி விட்டான்.
மன்னன் சீசரை படையின் தளபதியாக்கி விடுகிறான்.
ஹெக்டர் தன் பேராசைக்கு வெட்கி, தன் செயலுக்கு வருந்தினான்.
மன்னன் பாரீஸ் தான் சீசருக்கும், ஹெக்டருக்கும் கடிதம் அனுப்பியிருந்தான். இந்த சோதனையால் நேர்மையான ஆளை கண்டுகொள்ள முடிந்தது.
முற்றும்


ஆலோசனை


நஜீர் கான் பாரசீக மன்னனின் மந்திரி.
நஜீர் கான் உடைய மனைவி, மிகவும் புத்திசாலி.
ஒரு நாள் ஒரு எலி படுக்கை அறையில் ஓடுவதை மன்னன் பார்த்தான்.
ஓஹ், இதை நான் இனி சகிக்க முடியாது.
போ, நஜீர் கானை உடனே அழைத்து வா


அரண்மனையின் ஒவ்வொரு மூலையிலும் எலிகள் உள்ளன. எனக்கு சலித்து விட்டது, இதற்கு எதாவது தீர்வு கொண்டு வா.
சரி, சுல்தான்.
மந்திரி எலி பிரச்சனையை சமாளிக்க ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கி இருக்கும் பொழுது, இதைக்கண்டு மனைவி அங்கே வருகிறாள்.
உங்களுக்கென்ன கவலை ?
அரண்மனையில் எலிகள் தொல்லை, சுல்தான் எதாவது செய்ய சொல்லி விட்டார், என்ன செய்வதென்று தெரியவில்லை.


இது மிகவும் சுலபம்.எலி பிடிப்பவர்களை கூட்டி வந்து எலிகளைப் பிடியுங்கள். மற்றும்வேலையாட்களை விட்டு அரண்மனையின் எல்லா மூலைகளிலும் எலி மருந்தை வைக்கச் சொல்லுங்கள். இப்படி எலித்தொல்லையை ஒழித்து விடலாம்.
ஒரு பெண்ணின் அறிவுரையை நான் ஏன் கேட்க வேண்டும்? என் பணி சம்மந்தமான பிரச்சனையை நானே தீர்த்துக்கொள்வேன்.
அடுத்த நாள்...
என்ன நஜீர்கான், எலிப்பிரச்சனைக்கு எதாவது தீர்வுடன் வந்திருக்கிறீர்களா?
ஆமாம் சுல்தான், பூனைகள் தான் இதற்கு ஒரே தீர்வு. அரண்மனையின் எல்லா மூலைகளிலும் பூனைகளை விட்டால், அவை எலிகளை வேட்டையாடி ஒழித்துவிடும். இதன் மூலம் நாம் எலிகளைக் கொன்ற பாவத்திலிருந்தும் தப்பி விடலாம்.
ஓ நீங்கள் ஒரு அறிவாளி, உங்களைக் கண்டு நான் பெருமைப்படுகிறேன்.


நல்ல ஜாதி பூனைகளை கொண்டு வாருங்கள்.
வேலையாட்கள், பூனைகளை, அரண்மனையில், விடுகின்றனர்
இரண்டு நாட்கள் கழித்து, சுல்தான் மீண்டும் ஒரு எலி ஓடுவதை பார்க்கிறார்.
எலிகள் குட்டி போட்டு அரண்மனையை நரகமாக்கி விட்டன. நஜீருடைய நடவடிக்கை ஏன் தீர்வு காணவில்லை
போ, நஜீர் கானை உடனே இங்கே வரச்சொல்.


பூனைகளை வளர்க்க நிறைய பணம் செலவு செய்கிறோம். பூனைகள் இருந்தும் எலிகள் குறைந்த பாடில்லை. பூனைகள் எலி பிடிப்பதில்லை.
கவனிக்கிறேன் ஹுஜூர்.
பூனைகளுக்கு ராஜாங்க சாப்பாடு போடுவதால், அவை எலி பிடிப்பதில்லை. ஆகவே, எலி களுக்கு ராஜாங்க சாப்பாடு கொடுக்க வேண்டாம். எலி பிடித்து சாப்பிடட்டும்.
ஹுஜூர், நான் இதை கவனிக்கிறேன்.
நஜீர் வேலையாட்கள் அனைவரையும் கூட்டுகிறான்.
பூனைகளுக்கு ராஜாங்க சாப்பாடு போடுவதால், அவை எலி பிடிப்பதில்லை. ஆகவே, எலி களுக்கு ராஜாங்க சாப்பாடு கொடுக்க வேண்டாம். எலி பிடித்து சாப்பிடட்டும்.
சில நாள் கழித்து ....
நஜீர் கான், கடைசியில், நமது திட்டம் வேலை செய்தது. எலிகள் இங்கே இல்லை
ஆமாம் ஹுஜூர்.


பூனைகள் ஓடுவதை சுல்தான் கவனிக்கிறார்.
இப்பொழுது, பூனைகளை என்ன செய்வது, இவை அரண்மனையை நரகமாக்கி விட்டன.
பூனைகள் கத்துவதைக்கேட்டு, நான் நோயாளியாகிவிட்டேன். எனக்கு நிம்மதி வேண்டும், அரண்மனையை பூனையில்லா பகுதியாக்குங்கள்.
சரி, சுல்தான்
என்ன சரி, உன் முட்டாள் தனமான யோசனையால், எலிகள் போய் பூனை தொல்லை வந்துவிட்டது. இப்பொழுது நீ தவறினால், உன் தலையை வெட்டி அரண்மனை வாசலில் தொங்க விடுவேன். மக்களுக்கு தெரியட்டும், உன்னைப்போல் ஆட்களுக்கு என்ன ஆகும் என்று .
பூனைகள் மிகமிக அதிகமாக உள்ளன.கொடுத்தால் யாரும் வாங்கவும் மாட்டார்கள். அவைகளை கொல்லுவதும் பெரிய பாவம். நான் என்ன செய்வது ?


நஜீர் கான் மனைவி, அங்கே அறைக்குள் வருகிறாள்.
என்ன ஆனது, ஏன் நீங்கள் வருத்தத்துடன் இருக்கிறீர்கள்.
இரண்டு நாட்களில் பூனைத்தொல்லை முடியவில்லை என்றால், சுல்தான் என்னை கொன்றுவிடுவார்.
யார் பூனைகளை கொண்டு வந்தது ?
நான் தான் சுல்தானுக்கு சொல்லி எலித்தொல்லை முடிக்க பூனைகள் வந்தன.
கவலைப்படாதீர்கள், ஒவ்வொரு பூனையையும் பிடித்து, கூண்டுக்குள் அடை யுங்கள். அவைகளை நாம் விற்று விடலாம்.
இது நல்ல யோசனை.
சிப்பாய்கள் ஒவ்வொரு பூனையையும் பிடித்து, கூண்டுக்குள் அடைத்தனர்.



அனைத்து பூனைகளும் கூண்டுக்குள் சிக்கி விட்டன.
இவைகளை துறைமுகத்திற்கு எடுத்துச் செல்லுங்கள். எலி பிடிக்க பழக்கப்பட்ட பூனை என்று சொல்லி விற்று விடுங்கள்.
சரி ஹுஜூர்
வேலையாட்கள் கூண்டுகளை துறைமுகத்துக்கு எடுத்துச் செல்கின்றனர்.
ஓஹ், நான் மிருகங்களை விற்பவன். பழக்கப்பட்ட பூனைகள் பெறுவது நல்லது. என்ன விலைக்கு தருவீர்கள் ?
ஐயா, எலி பிடிக்க பழக்கப்பட்ட பூனைகள், எலித்தொல்லையிலிருந்து விடுதலை பெற, யாருக்கேனும் வேண்டுமானால், வாங்கிக் கொள்ளுங்கள்.
பழக்கப்பட்ட பூனைகளானதால், ஒரு பூனை ஒரு தங்க காசு.
போப்பா, மூன்று பூனைகளை, இரண்டு தங்க காசுக்கு கொடு.
அதுவும் மொத்தாமாக வாங்கினால்
வியாபாரிகள் தங்க காசு கள் கொடுத்து பூனைகளை வாங்கிக்கொள்கின்றனர்.



வேலையாட்கள் தங்க காசுகளை நஜீருக்கு தருகின்றனர்.
நீ உண்மையில் புத்திசாலி, அத்தனை பூனைகளும் விற்றாகி விட்டது, இந்தா இந்த தங்க காசுகள்.
நஜீர் கான் தங்க காசுகளை மனைவிக்குக் கொடுக்க, மனைவி சில காசுகளை, வேலையாட்களுக்கு கொடுக்கிறாள்.
அடுத்த நாள்...
உண்மையில், அரண்மனை அமைதியாக இருக்கிறது. நஜீர் கான், நீ ரொம்ப புத்திசாலி, இரண்டே நாட்களில் மிகப்பெரிய வேலை செய்தாய், நான் உன்னை கண்டு பெருமைப்படுகிறேன்
நன்றி ஹுஜூர்.
முற்றும்.

# அறிவாளிகள்




பழங்காலத்தில் ஆதித்யா என்ற ஒரு குரு வாழ்ந்து வந்தான். அவன் ப்ரஹலாதா பற்றி தன் சிஷ்யருக்கு கற்பித்து வந்தான். ஏக் நாத் என்றவன் அவனுக்கு பிடித்தமான சிஷ்யன்.
இந்த பிரபஞ்சத்திற்கு வாசுதேவ் உயிரும் எல்லாமும். அவன் எல்லாஇடத்திலும் இருக்கிறான். அவனை தேடுவது முட்டாள் தனம். அறிவாளிகள் மட்டும் அவனை அடையாளம் கொள்ள இயலும்
குருகுலத்தில் தன் பாடத்தை முடித்து ஏக் நாத் வீடு திரும்பும் பொழுது, பிரயாணத்திற்கு சில ரொட்டி களை கட்டினான்.


ஏக் நாத் சிறிது ஓய்வெடுக்க பிரயாணத்தை நிறுத்துகிறான்.
ரொட்டிகளுக்கு கொஞ்சம் நெய் தடவ வேண்டும்.
ஒரு நாய் வந்து, ரொட்டிகளை கவ்விச்சென்று விடுகிறது.
ஒஹ்....
அவனுக்கு அந்த நாயை கண்டு ஒரு அபூர்வ உணர்வு உண்டாகிறது.
ஓ...கிருஷ்ணா... நீ என் ரொட்டிகளை உண்ண இந்த உருவத்தில் வந்திருக்கிறாய், வீடுகளிலிருந்து வெண்ணை திருடியது போல.


ஆனால், என் கோமானே, கொஞ்சம் இரு, ரொட்டி மீது நெய் இல்லை, கொஞ்சம் தடவுகிறேன்.
ஏக் நாத் ரொட்டியின் மீது நெய் தடவ நாயின் பின்னால் ஓடுகிறான்.
நாய் மறைந்து விடுகிறது, குழல் சத்தம் கேட்கிறது
ஆஹ்ற.... வாசுதேவா... நான் அருளப்பெற்றேன்.
ஏக் நாத் நெய் கிண்ணத்தை வீசி விட்டு, நெய் இல்லாமல் ரொட்டி சாப்பிடுகிறான்.


என் கோமான் சாதா ரொட்டி எடுத்துக் கொண்டார், ஆகவே நானும் நெய் இல்லாத ரொட்டி உண்பேன்.
ஏக்நாத் வளர்ந்தது போல், அவன் கடவுள் பக்தியும் வளர்கிறது.
ஏக்நாத் தன் சிஷ்யர்களுடன் ராமேஷ்வரம் போய்க்கொண்டிருந்தான்.
ராமேஷ்வரத்தில் சிவலிங்கத்தின் மீது புனித கங்கை நீரை ஊற்றுவது சடங்கு.


ஒஹ், பாருங்கள், இந்த கழுதை நீரில்லாமல் காய்ந்து போய் இருக்கிறது.
அது கோடையின் மத்திய காலம். கிணறுகளும் ஆறுகளும் காய்ந்து போய் இருந்தன.
கடவுளே இந்த உருவத்தில் வந்து இருக்கிறான் என நான் நினைக்கிறேன். அந்த கங்கை நீரை கொடுங்கள்.


ஏக் நாத், கங்கை நீரை கழுதை மீது ஊற்றி விடுகிறான்.
ஏக் நாத் அடுத்த பானையை கழுதை குடிக்க கொடுத்து விடுகிறான்.
குருஜீ, ராமேஷ்வரம் சென்று நாம் என்ன கொடுக்கப்போகிறோம்.
இப்பொழுது, ராமேஷ்வரம் போக வேண்டியதில்லை, கடவுளே இந்த கோலங்களில் தோன்றி விட்டார்.
SSPPPPP...
"கடவுளுக்கு உருவம் கிடையாது. கடவுள் எல்லா இடத்திலும் உள்ளான். இதைப்புரிந்து கொண்டவர் அறிவாளிகள்."
முடிவு


செழிப்பான நாடு


புஷ்பக் என்ற நாடு இயற்கை அழிவால் பாதிக்கப்பட்டு, மக்கள் பெரும் அவதிக்கு ஆளாயிருந்தனர்.
சென்ற வருடம் வறட்சி பயிர்களை பாதித்தது. இந்த வருடம், பயிர்கள் வெள்ளத்தால் அழிந்தன.
அது எனக்கு வேண்டும்.
இல்லை .. வா...
மக்கள் ஒரு கெட்ட காலத்தை அனுபவித்தனர், அவர் சம்பாதித்தது சில அடிப்படை தேவைகளுக்கே சரியாக இருந்தது.
மாண்புமிகு மன்னா, அரசாங்க கஜானா காலியாகி விட்டது.
ஏன் அப்படி, என்ன காரணம் ?


மக்களால் ஒன்றும் கொடுக்க இயலவில்லை. இந்த நிலைமையில் நாம் அவர்களை கட்டாயப்படுத்த முடியாது.
ஒரு அவசர கூட்டத்திற்கு எல்லா மந்திரி களையும் அழையுங்கள்.
நம் அரசாங்க கஜானா காலியாகி விட்டது. உங்கள் யோசனைகளை சொல்லுங்கள்.
மன்னா, நம் ராஜ்ஜியம் இயற்கை அழிவின் காரணத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது.
ஆமாம், அது உண்மை. ஆனால், இயற்கை அழிவை தடுப்பது என் கையில் இல்லை.
ஆனால் நாம் திட்டம் தீட்டி நெருக்கடியை சமாளிக்கலாம் மன்னா.
எப்படி ?
மன்னா, ஆறுகளின் மீது அணைகளைக்கட்டி, மழை நீரை சேமிக்கலாம். அதை வறட்சிக் காலத்தில் புத்திசாலித்தனமாக உபயோகிக்கலாம்.


இது ரொம்ப நல்ல யோசனை. ஆனால் இதற்கு நிறைய பணம் தேவை, நம் நிலைமை அனைவருக்கும் தெரியும்.
நாம் முயற்சித்து, அண்டை நாடுகளிலிருந்து கடன் பெறலாம். அவைகள் உதவி செய்யும் என்று நான் நம்புகிறேன்.
நம் அண்டை நாடான சம்பாபூர் இரக்கமும் பெருந்தன்மையும் கொண்ட மன்னரால் ஆளப்படுகிறது, இவர் நிச்சயமாக உதவி செய்வார்.
சரி, சோம் நாத், தயவு செய்து போய் சம்பாபூர் போக ஏற்பாடு செய்யுங்கள்.
மந்திரி சோம் நாத் சம்பாபூர் செல்கிறார்
சம்பாபூர் ரஜ்ஜியத்தின் வெளிப்புரத்தில் நுழைந்ததும், அகலமான சாலைகள், அற்புதமான கட்டிடங்கள், பசுமையான வயல்கள் கண்டு சோம் நாத் ஆச்சரியப்படுகிறார். அவர் அங்கே ஒரு குடிசையையும் காணவில்லை.


மக்கள் விலை உயர்ந்த ஆடைகளும் ஆபரணங்களும் அணிந்து சாலைகளில் நடந்து சென்றனர். அனைவரும் மகிழ்ச்சியாக காணப்பட்டனர்.
சம்பாபூர் உண்மையில் ஒரு செழிப்பான நாடு.
சோம் நாத் சம்பாபூரின் சபைக்கு சென்றார்.
மாண்புமிகு மன்னா, நான் சோம் நாத், புஷ்பக் என்ற அண்டை நாட்டிலிருந்து வந்திருக்கிறேன். உங்கள் நேர்த்தியான ஆட்சியில், சம்பாபூர் செழிப்பாக உள்ளது. மக்கள் மகிழ்சியாக உள்ளனர்.
எங்கள் ரஜ்ஜியத்திற்கு வருக ! சோம் நாத் உங்கள் பாராட்டுகளுக்கு நன்றி. தாங்கள் வருகை தந்த காரணம் ?


மந்திரி சோம் நாத் தன் வருகையின் காரணத்தை விளக்குகிறார்.
மன்னரே, உங்கள் இராஜ்ஜியத்தின் பண உதவி பெற நான் வந்திருக்கிறேன்.
சோம் நாத் முன்பு ஒரு காலம் இருந்தது தொகையை அப்படியே கொடுத்து வந்தேன். இப்பொழுது நம் நிலைமையும் சரியில்லை. ஆனால், ஒரு நிபந்தனையில் பண உதவி செய்ய முடியும், ஐந்து வருடங்களில் திருப்பிக்கொடுக்க ஒப்புக்கொள்ள வெண்டும்.
சம்பாபூர் செழிப்பானது தான், இருந்தும் அதன் அரசனுக்கு திருப்தியில்லை. அவர் தானமாக கொடுப்பதை விட கடனாக கொடுக்க விரும்புவதை வெளிப்படையாக சொல்கிறார். எப்படியும், அவர் கடனளிக்க ஒப்புக்கொண்டார், நமது ராஜ்ஜியத்திற்கு பணம் தேவைப்படுகிறது.
மன்னா, உங்கள் நிபந்தனையை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்
சரி.
அரசர், சோம்நாத்துக்கு தேவையான தொகையை கொடுக்க மந்திரியை பணிக்கிறார்.
திரும்பி வரும் பொழுது, சோம் நாத் ஒரு விசித்திரமான நிகழ்சியை காணுகிறார்.


சோம் நாத் திரும்பிக்கொண்டிருக்கும் பொழுது, அரண்மனைக்கு வெளியில் நிறைய மக்கள் கூடியிருந்து ஒரு குவளத்தில் சீட்டுகளை போட்டுக்கொண்டிருக்கிறார்கள்.
ஒரு அரசாங்க பிரதிநிதி பத்து சீட்டுக்களை எடுத்து, பெயர்களைப் படிக்கிறார் ஒவ்வொருவருக்கும் ஆயிரம் தங்க காசு கள் கொடுக்க சொல்கிறார்.
சோம் நாத் இதைப்பார்த்து ஆச்சரியப்பட்டார்.
இங்கே என்ன நடக்கிறது ?
ஆண்டு தோறும், ஒவ்வொரு கிராமத்திலிருந்து பத்து பேரை தேர்ந்தெடுத்து, கௌரவத்துடன் ஆயிரம் பொற்காசுகள் பரிசளிக்கிறார், நமது அரசர்.
உங்கள் ராஜ்ஜியம் உண்மையில் செழிப்பானது. இதைப்போல் தன் மக்களை வேறு எந்த அரசனும் கௌரவிக்க மாட்டார்.



இது ஒன்றுமில்லை
என்ன சொல்கிறீர்கள் ?
எங்கள் ராஜ்ஜியம் முன்பு இன்னும் செழிப்பாக இருந்தது. அனைத்து குடி மக்களும் ஆளுக்கு ஆயிரம் பொற்காசுகள் பெற்று வந்தனர்.
சம்பாபூர் மன்னன் மீது நான் சந்தேகப்பட்டேன். ராஜ்ஜியம் நல்ல நிலையில் இல்லை என அவர் சரியாகத்தான் சொன்னார். இருப்பதை ப்பார்த்து முடிவு செய்யக்கூடது. அதனால், என்ன நடந்திருக்கும் ?
மந்திரி யோசித்துக்கொண்டே போய் ஒரு முடிவுக்கு வந்தார்.
செழிப்பாக இருந்தாலும், உதவி கேட்டு வருபவர்களுக்கு இலவசமாக எதையும் கொடு க்கக்கூடாது. அப்படி செய்தால் கூடிய சீக்கிரம் கஜானா காலியாகி விடும்.
அது மட்டுமல்ல, இலவச பணம் மக்களை சோம்பேறி ஆக்கிவிடும். மக்கள் வேலை செய்யாமலிருந்தால், நாட்டின் உற்பத்தி திறன் குறைந்து, ராஜ்ஜியத்தின் வளர்ச்சி பாதிக்கும்.
மந்திரி இந்த மாதிரியான தவறுகள் தன் நாட்டில் நடக்காமல் இருக்க முடிவு செய்தார்.
முற்றும்

# டாய்சுகேவின் அறிவு




ஜப்பான்நாட்டில், அகிஹீரொஎனஒருநிலக்கிழார்இருந்தான்.
டாய்சுகே, ஹசிரொஎனஇரண்டுவேலையாட்கள் அவனிடம் இருந்தனர்.
டாய்சுகெஅவனுடையவேலைமுழுவதையும்நேரத்தோடுமுடித்தான்.
எஜமான் சந்தோசப்படுவார்.
டாய்சுகெஇந்ததுணிகளைப்பார்.
இதுதான்நீசுத்தம்செய்யும்லட்சணமா?
பலவருடங்களா கநீஇங்கேவேலைசெய்கிறாய். இருப்பினும் சிறுசிறு விசயங்களைக் கூட நான்சொல்லிகொடுக்க வேண்டியதி ருக்கிறது.
நான்எப்பொழுதும் முழுமனதுடன்வேலைசெ ய்துவருகிறேன், ஆனால், எஜமான்எதாவதுதவறைசெ ால்லிஎன்னைதிட்டுவார்.
அகிஹிரொஎப்பொ ழுதும்எதா வதுஒர்தவறை சுட்டிகாட்டிடாய்சுகெ வைதிட்டிக்கொ ண்டிருப்பான்.


ஒருநாள்....
எப்படிஇரு க்கிறீர்கள்திரு. குரோசாவா?
அகிஹிரொ, நான்என்ன சொல்லவந்தேன்என்றால், அடு த்த கிராமத்தில் நான்திரு. இசிரோ வைசந்தித்தேன். அவருக்குஒரு அழகானம கள் இருக்கிறாள். உன்னைய னுக்குபொ ருத்தமாக இருப்பாள்.
ஓஹ், அதுரொம்பநல் லசெய்தி.
நாம்அவர்வீட் டிற்குபோய்இங்கே அழைக்கவேண்டும்
சரி, நாளை காலையில் போகலாம்.
அடுத்தநாள், அகிஹிரொதிரு இசிரொவீட்டிற்கு ப்போய் அவரைஅழைக் கதயாராகஇருந்தான்.


நான்அடுத்த கிராமத்திற்கு ப்போகிறேன். நான்திரும்பி வருவதற்குள் வீட் டைசுத்தப்படுத்தி, அல ங்கரித் துவையுங்கள்.
சரி, எஜமா...
எஜமான்போனஉடன்...
நான்நேர்மையுட ன்வேலைசெய்தாலும், எஜமான்தி ட்டத்தான் போகிறார்.
ஹசிரொ, கவனி, எஜமா ன்பக்கத்துகிராம த்திற்குபோய்இருக்கிறார். உன்னைவீடுசுத்தமாகவை வக்கச்சொல்லியி ருக்கிறார்.
எனக்குதெரியும், எதாவதுமுக்கியமா னவிஷய ம்இரு க்கும்பொ ழுதுஎஜ மான் என்னை செய்யச்சொல்வார். கவலைப்படாதே, நான்ப ார்த்துக் கொள்கிறேன்.


எஜமானரும்,
விருந்தாளிக ளும்வந்தால்,
அலங்கார த்தைபார் த்துஅதிர்
ச்சிஅடைவார்கள்.
ஹசிரொஇந்தவேலைகிடைத்துமகிழ்ந்தான். இவனைவிட நல்லமுறை யில்யாரும்செ ய்யமுடியாதுஎ னநினைப்பான். உண்மையில், அவன்எதுவும் சரியாகசெய்யமாட்டான்.. அவன் வீட்டைகெட்ட முறையில்அலங்கரித்தான்.
அடுத்தநாள் அகிஹிரொ விருந்தாளிகளுடன்வந்தார். அலங்கார த்தைப்பார்த்துஎல் லோரும்சிரித்தனர்.
அகிஹிரொகோபத்துடன், டாய்சுகெவை க்கூப்பிட்டு திட்டஆரம் பித்தான். அத்தனைதிட் டுகேட்டுடாய்சுகெ சும்மா இருந்தான், ஒன்றும் பேசவில்லை.


என்வேலைக்காரன் படிக்காதவன். அவனுக்கு ஒன்றும்தெரியாது, அவனா ல்எனக்கு பேஜாராக இருக்கிறது.
பிரச்சனைஇல்லை. நாம்இங் கேதங்கியிருந்துவே லைஎப்படிநல்ல முறையில்செ ய்வதுஎன்று சொல்லிதரலாம். இப்பொழுதுந ல்லவே லை யாட்கள்கிடைப்பதில்லை.
நீங்கள்இவ்வளவுதிட்டியும் அவன்ஒன்றும்சொல்லவில்லை. இதனால்நான்மிகவும்கவரப்பட்டேன். இந்தமா திரிவேலை யாட்கள்இருக்கு ம்வீட்டில்என்மகளைகொடுக்கஎன க்குசம்மதம், அவள்மகிழ்ச் சியாகஇருப்பாள்.
விருந்தாளிகள்போனபின்அகி ஹிரொடாய்சுகெவைஅழைத்தான்.
டாய்சுகெநான்திட்டும் பொழுதுஇவ்வளவுஅமை தியாகநீஇருந் ததைநான் கண்ட தேஇல்லை. ஏன்நீஎதுவும் சொல்லவில்லை?


உன்னால், இன்றுஎன்ம கனின் திருமணம் ஒருபணக் காரவீட்டில் முடிவுசெய் யப்பட்டது.
எஜமான், வீடுசரியாக அலங்கரிக்கப்படவி ல்லைஎன்றுநீங் கள்திட்டினீர்கள். உண்மைஎன்ன வென்றால், வீட்டைஹசிரொ அலங் கரித்தான். உங்கள்திட்டுஎல்லாம்அ வனைச்சாரும், நான்ஏன்கவ லைப்படவேண்டும்.
அந்தமுட்டாள்சரியா கசெய்வதில்லைஎன்றுஉனக் குதெரியாது? ஏன்அவனிட ம்பொறுப்புகொடுத்தாய்?
எஜமா, நான்என்னசெய்ய? நான்கஷ்டப்பட்டுஎதைசெய்தா லும்தவறுகண்டுபிடித்துஎன்னைதிட் டுகிறீர்கள். நான்மட் டும்தனியா கஏன்திட்டுகேட்கவேண்டும், ஆகவேஅவனிடம்கொடுத்தேன்.
அகிஹிரொ அவர்தவறைஉணர்ந்து, அன்றிலிருந் துடாய்சுகெதவறு களைகண்டுபிடிப்பதை விட்டுவிட்டார்.
முற்றும்.




Buy Books & eBooks Online at www.indianvedicschool.com

**INDIAN VEDIC SCHOOL PVT LTD.**

Plot No: 29B, Laxmi Nilayam, Road No: 8, Film Nagar,
Jubilee Hills, Hyderabad - 500096, Telangana, India.
info@indianvedicschool.com www.indianvedicschool.com
+91 7337200273